Australian Government

Department of Agriculture, Water and the Environment

# தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள்: (Product Emissions Standards) இறக்குமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கான தகவல்கள்



## வெளிப்புற மின் சாதனங்களை அல்லது கடல்சார் எந்திரங்களை இறக்குமதி செய்கிறீர்களா, உற்பத்தி செய்கிறீர்களா அல்லது வழங்குகிறீர்களா?

வெளிப்புற மின் சாதனங்கள் மற்றும் கடல்சார் எந்திரங்களுக்கான நச்சுப் புகை உமிழ்வுச் செந்தரங்கள் கடந்த ஜனவரி 2018-லிருந்து அமுல்படுத்தப்படுகின்றன. இடைமாற்ற நேரத்தை துறைக்குக் கொடுக்கும் வகையில் செந்தரங்கள் ஒரு பலகட்ட அணுகுமுறையைக் கடைபிடிக்கிறது. நீங்கள் கட்டுப்பட்டு நடப்பதை உறுதிசெய்ய நீங்கள் எடுக்க வேண்டிய படிநிலைகள் உள்ளன.

**1 ஜூலை 2018**—அதிகமாக மாசுபடுத்தும் புதிய வெளிப்புற மின் சாதனம் மற்றும் கடல்சார் எந்திரங்களை ஆஸ்திரேலியாவில் இனி இறக்குமதி செய்ய இயலாது

**1 ஜூலை 2020**—அதிகமாக மாசுபடுத்தும் புதிய வெளிப்புற மின் சாதனம் மற்றும் கடல்சார் எந்திரங்களை ஆஸ்திரேலியச் சந்தையில் இனிமேல் பயன்பாட்டுக்கு அளிக்க  இயலாது. இந்தத் தேதியிலிருந்து, ஆஸ்திரேலியாவிற்குள் இறக்குமதி செய்யப்பட்ட ஐரோப்பிய சான்று பெற்ற சாலையில் ஓடாத தயாரிப்புகள் யூரோ ஸ்டேஜ் V உமிழ்வுத் தரங்களுக்கும் கட்டுப்பட்டிருக்க வேண்டும்.

யூரோ ஸ்டேஜ் II உமிழ்வுத் தரங்களின்படி சான்றுபெற்ற சாலையில் ஓடாத தயாரிப்புகள் வரும் 30 ஜூன் 2021-வரை ஆஸ்திரேலியாவிற்கு வழங்கப்படலாம், அதற்குப் பிறகு, யூரோ ஸ்டேஜ் V சான்று பெற்ற தயாரிப்புகளை மட்டுமே வழங்க முடியும்.

விவசாயம், தண்ணீர் மற்றும் சுற்றுச்சூழல் துறை செந்தரங்களை நிர்வகிக்கிறது. விண்ணப்பக் கட்டணம் ஆஸ்திரேலிய சான்றளிப்புகள் மற்றும் விதிவிலக்குகளுக்குப் பொருந்தும். தீர்வைகள் இறக்குமதி செய்யப்பட்ட புதிய எந்திரத்தின் தயாரிப்புகளுக்கும், உள்நாட்டு உற்பத்திக்கும் பொருந்தும்.

## இந்தச் செந்தரங்கள் எந்தத் தயாரிப்புகளுக்குப் பொருந்தும்?

செந்தரங்கள் பின்வருவனவற்றிற்குப் பொருந்தும்:

- லான் மூவர்ஸ், ரைட்-ஆன் மூவர்ஸ், மல்சர்ஸ், பிரஷ் அல்லது லைன் கட்டர்கள், ஜெனரேட்டர்கள், பம்புகள், செய்ன்சா-க்கள் மற்றும் ஜெனரேட்டர்கள் மற்றும் பம்புகள் போன்ற படகுகளில் உள்ள துணை எந்திரங்கள் உட்பட வீடுகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் 19 கிலோவாட் மற்றும் அதற்குக் கீழ் உள்ள ஸ்பார்க் இக்னிஷன் எந்திரங்கள்
- அவுட்போர்டு எந்திரங்கள், தனிப்பட்ட வாட்டர்கிராஃப்ட், மற்றும் ஸ்டெர்ன்டிரைவ் அல்லது இன்போர்டு எந்திரங்கள்உட்பட. கடல் கலங்களில் பயன்படுத்தப்படும் ஸ்பார்க் இக்னிஷன் எந்திரங்கள்

செந்தரங்களுக்கு உட்பட்ட தயாரிப்புகளின் பட்டியலுக்கு www.environment.gov.au/protection/air-quality/emissions-standards-ஐ பார்க்கவும்.



## நான் என்ன செய்ய வேண்டும்?

- புகை உமிழ்வுச் செந்தரங்களுக்கு உட்பட்ட அனைத்துத் தயாரிப்புகளிலும் ஆஸ்திரேலிய சான்றளிப்போ அல்லது அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச சான்றளிப்போ இருப்பதை உறுதிப்படுத்துங்கள். அமெரிக்க சுற்றுச்சூழல் பாதுகாப்பு முகமை (United States Environmental Protection Agency), கலிபோர்னிய ஏர் ரிசோர்சஸ் போர்டு (California Air Resources Board), ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகள், மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (Environment and Climate Change) கனடா ஆகியவற்றின் சான்றளிப்புகள் ஏற்கப்படும்
- தேவைப்பட்டால், ஆஸ்திரேலிய புகை உமிழ்வுச் செந்தரங்களிடமிருந்து ஒரு விதிவிலக்கினைப் பெறுங்கள். துறைக்கு விண்ணப்பம் செய்யலாம், குறிப்பிட்ட சூழல்களில் அனுமதிக்கப்படலாம்
- நீங்களும் உங்களுடைய சுங்கத் தரகரும் ஒருங்கிணைந்த கார்கோ சிஸ்டத்தில் (Integrated Cargo System) உங்களுடைய சாதனம் மற்றும் எந்திரத்துக்கான சரியான சான்றளிப்பு அல்லது விதிவிலக்கு எண்ணை உள்ளிடுவதன் மூலம் சமூகப் பாதுகாப்புக் கேள்விக்கு (community protection question) சரியாகப் பதிலளிப்பதை உறுதிப்படுத்துங்கள்
- இறக்குமதி செய்யப்பட்ட, ஆஸ்திரேலியாவில் பொருத்தப்பட்ட அசெம்பிளி தயாரிக்கப்பட்ட அனைத்துத் தயாரிப்புகளும் சான்று பெற்றவை மற்றும் ஆஸ்திரேலிய செந்தரங்களைப் பூர்த்தி செய்பவை அல்லது ஒரு விதிவிலக்கு அளிக்கப்பட்டவை என்பதைக் காட்டும் பதிவேடுகளை வைத்திருங்கள்.



கூடுதல் தகவலுக்கோ அல்லது புகை உமிழ்வுச் செந்தரங்களின்கீழ் ஆஸ்திரேலிய சான்றளிப்புகளுக்கோ அல்லது விதிவிலக்குகளுக்கோ விண்ணப்பிப்பது எப்படி என்று அறியவோ www.environment.gov.au/protection/air-quality/emissions-standards அல்லது at productemissions@awe.gov.au என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யுங்கள்.



ENV307.0420